ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂමානது

අංක 2149/17 - 2019 නොවැම්බර් මස 13 වැනි බදාදා - 2019.11.13

*2149/17 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### சனாதிபதியினால் செய்யப்படும் பிரகடனம்

முத்திரை

மைத்திரிபால சிறிசேன

இலங்கையின் வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள புனித மடு மாதா தேவாலய நிலமானது இலங்கையில் போன்று உலகில் வாழும் அநேகமான கத்தோலிக்க பக்தர்களின் பெருமதிப்புக்குப் பாத்திரமாகியுள்ளதாலும், சொல்லப்பட்ட புனித மடு மாதா தேவாலயத்துக்கு வழிபடுவதற்காக வருகின்ற கத்தோலிக்க பக்தர்களின் வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான முழு வசதிகளை ஏற்படுத்தும் நோக்குடன் 1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நகரங்கள் மற்றும் கிராம நிர்மாண கட்டளைச் சட்டத்தின் 6(2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) ஆம் பிரிவுகளின் கீழ் 2019.10.19 ஆந் திகதிய 2145/55 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நகர அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாலும்,

மேலும், சொல்லப்பட்ட புனித மடு மாதா வழிபாட்டுக் காலத்தினுள் புனித மடு மாதா பிரதேசத்திற்கு வருகை தருகின்ற ஆயிரக்கணக்கான மக்கள் அசௌகரியத்திற்கு ஆளாகாது அங்கு தங்கியிருப்பதற்கு வாய்ப்பளிக்கும் எதிர்பார்த்தலுடன், 1896 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, யாத்திரைகள் பிரயாணக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மடு வழிபாட்டு ஒழுங்குவிதிகள் 1982 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதிய 185 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் நிபந்தனைகளுக்கு அமையுமாறும்,

மேலும், 2012.10.10 ஆந் திகதிய 1779/ 15 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மடு வீதி ஒதுக்க வனப் பிரதேசம் மற்றும் 2015.06.22 ஆந் திகதிய 1920/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மடு வீதி தேசிய வன ஒதுக்கத்தில் சொல்லப்பட்ட நிலப்பிரதேசம் உள்ளடங்குவதால் 1885 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம், 1937 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தாவர வன விலங்குகள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டமாகிய சட்டங்களின் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் இந்நிலத்தைப் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்திக்கொண்டு,

புனித மடு மாதா தேவாலயத்திற்கு வழிபடுவதற்காக வருகின்ற பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்க பக்தர்களின் சமய ரீதியான நலனை ஏற்படுத்துவதற்காக முதலாம் அட்டவணையில் காட்டப்படும் நிலப்பிரதேசத்தைப் புனித வழிபாட்டுத் தலப்பிரதேசமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 (2) (ஏ) ஆம் துணை உறுப்புரையின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களிற்கமைய பிரகடனப்படுத்துகின்றேன்.

2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி கொழும்பில்,

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை - 01**

வட மாகாணம், மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலகப் பிரிவின் மடு கிராம அலுவலர் பிரிவில் மடு எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட பதிவெடுப்பு இல. : Ma/MDU/2018/185 இன் A, B, C, D, E மற்றும் F துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ளதுமான இரண்டாயிரத்து நூற்றி அறுபது தசம் மூன்று நான்கு மூன்று இரண்டு (ஹெக்டயார் 2160.3432) ஹெக்டயார் விசாலமானதெனக் கணிப்பீடு செய்யப்பட்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் காணிப் பகுதியாகும்.

11-1607

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.